**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆடி மாதம் 9ம் நாள்
**இ.ம.எண். 1/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 82/2023**

1. மாவட்ட ஆட்சியர்,
மயிலாடுதுறை.
2. தாசில்தார்,
தரங்கம்பாடி. ..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

அமுதசுரபி ..எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. K.S.S. குணசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.வில்சன் ஈஸ்டர் ராஜ் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உ த்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது வாதி தரப்பில் சாட்சியம் அளித்துள்ள PW1 அவர்களை Reopen செய்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் 2வது பிரதிவாதி ஆவார். இந்த மனுவை தன் சார்பாகவும், மற்ற மனுதாரர் சார்பாகவும் தாக்கல் செய்துள்ளார். PW 1 கடந்த 19.12.2024 அன்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாகவும், மேற்படி வழக்கை மேல்நடத்த 28.04.2025 அன்று வாதங்களுக்காக வாய்தா போடப்பட்டதாகவும், இவ்வாறான தருணத்தில் தான் தனது தரப்பில் எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்யவேண்டியது அவசியமானதாகவும், நியாயமானதாகவும் உள்ளது எனவும், PW1 ஆன வாதியை Recall செய்ய வேண்டுமாறு பணிந்து வேண்டுவதாகவும்,

எனவே, மேன்மைமிகு நீதிமன்றத்தார் அவர்கள் வாதி தரப்பில் சாட்சியம் அளித்துள்ள PW1 அவர்களை Reopen செய்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்:**

3. இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. வழக்கு ஒரு முன்னேறிய கட்டத்தை எட்டியுள்ளது என்றும், மேலும் இறுதி வாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் 2வது மனுதாரர்/பிரதிவாதி PW 1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய கோருவது மனுதாரருக்கு தேவையற்ற தாமதத்தையும் பாரபட்சத்தையும் ஏற்படுத்தும் என்றும், விசாரணையின் போது PW1 ஐ குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு, தற்போது மனுவை தாக்கல் செய்திருப்பது தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்தும் என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**தீர்வு:**

5. மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்/வாதி வாதியின் வளர்ப்புத்தாயார் ஆனந்தவள்ளியின் வாரிசு வாதிதான் என்று விளம்பல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வா.சா.1 கடந்த 19.12.2024 அன்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாகவும், மேற்படி வழக்கை மேல்நடத்த 28.04.2025 அன்று வாதங்களுக்காக வாய்தா போடப்பட்டதாகவும், இவ்வாறான தருணத்தில் மனுதாரர் தரப்பில் வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வது அவசியமாக உள்ளதால் வாதி தரப்பு சாட்சியை மறுதிறவு செய்ய கோரி கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், வழக்கு ஒரு முன்னேறிய கட்டத்தை எட்டியுள்ளது என்றும், மேலும் இறுதி வாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் 2வது மனுதாரர்/பிரதிவாதி வா.சா. 1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய கோருவது மனுதாரருக்கு தேவையற்ற தாமதத்தையும் பாரபட்சத்தையும் ஏற்படுத்தும்

என்றும், விசாரணையின் போது வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு, தற்போது மனுவை தாக்கல் செய்திருப்பது தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்தும் என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. எதிர்மனுதாரரால் இந்த அசல் வழக்கு விளம்பல் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 கடந்த 19.12.2024 அன்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி வழக்கை மேல்நடத்த 28.04.2025 அன்று வாதங்களுக்காக வாய்தா போடப்பட்டது, இவ்வாறான தருணத்தில் மனுதாரர் தரப்பில் வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வது அவசியமாக உள்ளதால் வாதி தரப்பு சாட்சியை மறுதிறவு செய்ய கோரி கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணையின் போது வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு, தற்போது மனுவை தாக்கல் செய்திருப்பது தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்தும் என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறப்பட்டுள்ளது. வா.சா. 1 ஐ குறுக்கு விசாரணை செய்வது மனுதாரர்கள் அவரது தரப்பை நிரூபிப்பதற்கு அவசியமாக உள்ளது என கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர்களுக்கு அவர்களது தரப்பை நிரூபிப்பதற்கு அவர்களுக்கு போதிய வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவை அனுமதிப்பது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம்

செய்யப்பட்டு இன்று 25.07.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**